விலை: சதம் 75

# ஈழநாடு
THE EELANADU

மலர் 23 | ஐப்பசி 29 | முஹரம் 16 | இதழ் 272
யாழ்ப்பாணம் | சனிக்கிழமை | 14-11-81

## "பெரும் வல்லரசுகளுடன் இலங்கையை இணைக்க முயற்சி"

### கம்யூனிஸ்ட் பிரமுகர் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

இலங்கையை ஏகாதிபத்திய வல்லரசுகளுடன் இணைக்கும் போக்கினை ஐ. தே. க. அரசு மேலும் துரிதப்படுத்திவருகிறது.

அதற்கு உதாரணமாக திருகோணமலையை அமெரிக்க எரிபொருள் குதம் அமைப்பதற்கும், அமெரிக்கக் கடற்படை வீரர்களுக்கு ஓய்வு கொடுக்கும் நிலையமாகவும் மாற்றியமைக்க நடவடிக்கை எடுத்துள்ளது. இது அண்டை நாடான இந்தியாவுக்குப் பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது. இப்போக்கினை எதிர்த்து மக்கள் அனைவரும் பேதங்களை மறந்து போராட முன்வரவேண்டும்.

இவ்வாறு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களில் ஒருவரும் அரசியல் குழு உறுப்பினருமான திரு எச். ஜி. எஸ். இரத்தினவீரா யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார்.

கட்சியின் யாழ் மாவட்ட கூட்டத்திற்குச் செயலாளர் திரு பொன் குமாரசாமி தலைமைவகித்தார். திரு. இரத்தினவீரா இன்றைய அரசியல் நிலைமையும் யாழ் மாவட்டத்தில் கட்சி கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகளும் என்ற தலைப்பில் கருத்துரை நிகழ்த்தினர்.

(6ம் பக்கம் பார்க்க)

★ ஜி ஸி ஈ [உயர்தரம்]-யாழ் மாவட்டம்:

# பரீட்சை முடிவுகள் படுமோசம்!

## அதிகமான மாணவர்கள் 2 பாடங்களில் மட்டும் சித்தி!

### கல்லூரி அதிபர்கள், பெற்றேர் அதிருப்தி

[கே. ஜி. எம்]

கடந்த ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற புதிய பாடத்திட்ட க. பொ. த [ஜி ஸி ஈ] உயர்தரப் பரீட்சை முடிவுகள் யாழ் மாவட்டத்தைப் பொறுத்தவரை படுமோசம் என்று வர்ணிக்கப்பட்டுள்ளது.

இப்பரீட்சைக்கு நாடு முழுவதிலும் சுமார் 96,560 மாணவர்கள் தோற்றினர்கள். இவர்களில் சுமார் 16,000 மாணவர்கள் தனிப்பட்ட பரீட்சார்த்திகளாகும்.

பரீட்சை முடிவுகள் நேற்று முன்தினம் பாடசாலைகளுக்குக் கிடைத்தன. தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் நேற்றுக்கிடைத்தன.

யாழ். மாவட்டத்திலுள்ள முக்கிய கல்லூரிகளின் அதிபர்களை "ஈழநாடு" நேற்றுத் தொடர்பு கொண்டு ஜி ஸி ஈ. (உயர்தர) பரீட்சைப் பெறுபேறுகள் குறித்து கேட்டபோது "முடிவுகள் திருப்தி கரமாக இல்லை. பெரும் ஏமாற்றமாக இருக்கிறது" என்று அவர்கள் தெரிவித்தனர்.

மாணவர்கள் உற்சாகத்துடன் பரீட்சைக்குத் தோற்றிய போதிலும் திறமையானவர்கள்கூட பரீட்சையில் "கோட்டை" விட்டிருப்பது வருத்தமளிக்கிறது என்று முன்னணி கல்லூரி அதிபர் ஒருவர் நேற்று தெரிவித்தார்.

யாழ். நகரில் சிறந்த பரீட்சைப் பெறுபேறுகளை வெளிக்கொணரும் சில முன்னணிக் கல்லூரிகளில்கூட இம்முறை அதிகமான மாணவர்கள் ஜி. ஸி. ஈ. உயர்தரப்பரீட்சையில் சித்தியடையத் தவறிவிட்டனர். அதிகமான கல்லூரிகளில் மாணவர்கள் சிலர் ஒருபாடத்திலும் அதிகமானவர்கள் ஒரு பாடத்திலும்கூட சித்தியடையவில்லை! சிலமுன்னணிக் கல்லூரிகளில் மூன்று அல்லது இரண்டு பாடங்களில் மட்டுமே மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

பரீட்சை முடிவு ஏமாற்றம் குறித்து ஆசிரியர்களிடம் கருத்துக்கேட்டபோது கடந்த ஜி. ஸி. ஈ. பரீட்சை முடிவுகள் இந்த நிலையை இங்கு தோற்றுவித்திருப்பதற்குக் குறுகிய கால புதியபாடத்திட்டம் காரணமாக இருந்திருக்கும் என்று தெரிவித்தனர்.

பரீட்சை முடிவுகள் குறித்து பெற்றோர் பரவலாக அதிருப்தியே தெரிவித்தனர்.

## தபால் பையுடன் ரூ 20000 கொள்ளை

(யாழ்ப்பாணம்)

இ. போ. ச. பஸ்மூலம் பளை தபால் நிலையத்துக்கு எடுத்துச் செல்லப்பட்ட பெருந்தொகைப் பணத்துடனான தபால் பையொன்று ஆயுதம் தரித்த இளைஞர் இருவரால் கொள்ளையடிக்கப் பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் தபால் நிலையத்திலிருந்து இ. போ. ச. பஸ் மூலம் 40,000 ரூபா பணம் எடுத்துச் செல்லப்பட்டதாம். இதில் கொடிகாமத்துக்கு 20 ஆயிரம்ரூபா ஒருதபால்பையிலும் பளை தபால் நிலையத்துக்கு 20 ஆயிரம் ரூபா இன்னொரு தபால் பையிலும் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. இதில் பளை தபால் நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்ட தபால் பையே கொள்ளையடிக்கப்பட்

6-ம் பக்கம் பார்க்க

## பளை பெற்றேல் நிலையத்தில் ரூ. 7,359 கொள்ளை

(பளை)

பளை பெற்றேல் நிலையத்தில் வியாழக்கிழமை அதிகாலை புகுந்த இரண்டு துப்பாக்கி இளைஞர்கள் 7359 ரூபாவை கொள்ளையடித்துச் சென்றுள்ளார்கள்.

அங்குபணிபுரிந்த ஊழியரின் புத்திசாதுரியத்தினால் இரும்புப் பெட்டிக்குள் இருந்த ரூபா 27

6-ம் பக்கம் பார்க்க

சார்ஜன்ட் அன்ரன் கொலைவழக்கு:

## மேல்நீதிமன்ற விசாரணைக்கு நீதவான் பாரப்படுத்தினர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பொலிஸ் சார்ஜன் அன்ரன் கொலை வழக்கு யாழ். நீதிமன்றத்தில் நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டபோது யாழ். நீதவான் திரு. ரி. ஜோகநாதன் மேல்நீதிமன்றத்துக்கு வழக்கை பாரப்படுத்தினர்.

இவ்வழக்கில் இராணுவத்தை சேர்ந்த டி. ஜே. ஹெட்டிஆராச்சி யு. உப்பில ஆகிய இருவர் மீதும் வழக்குத் தொடரப்பட்டிருந்தது. இவர்கள் இருவரின் கையடையாளங்களும் நேற்று யாழ் நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டது.

வழக்கை மேல் நீதிமன்றத்திற்குப் பாரப்படுத்துமுகமாக நீதவான் தமது குற்ப்வுரையில் பின்வருமாறு தெரிவித்தார்.

"இந்த வழக்கில் இரு எதிரிகளின் சார்பில் தோன்றிய சட்டத்தரணி எதிரிகளை மேல்நீதிமன்றத்தில் விசாரித்துக்கு அனுப்புவதற்குப் போதிய சான்று இல்லையென வாதாடினர். முதலாவதாகக் கண்கண்ட சாட்சி சோமசுந்தரம் பொய்ச் சாட்சியம் அளித்துள்ளாரெனவும், சோமசுந்தரத்தின் சாட்சியத்தின்படி முதலாம் எதிரி இறந்த அன்ரனிலும் பார்க்கக் குறைவான உயரமுடையவரென்றும் சோமசுந்தரம் கூறியபடி முதலாம் எதிரி இறந்தவர் நின்றபொழுது சுட்டிருக்கமுடியாது என்றும் அவர் வாதாடினர்.

வைத்திய அறிக்கையின்படி இறந்தவரின் உடற்காயங்களில் சன்னங்கள் உட்புகுந்த உகரம் சன்னங்கள் வெளியேறிய உயரத்திலும் பார்க்க கூடுதலான உயரமுள்ளதாக இருக்கின்றது என்று மேலும் அவர் வாதாடினர் மன்றின் அபிப்பிராயப்படி சோமசுந்தரம் இந்தச்சம்பவம் நடந்த இடத்தில் இருந்தவரா என்பதற்குப் போதிய ஆதாரமுண்டு.

அவர் அன்றிரவு காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேலும் சோமசுந்தரம் தனது சாட்சியத்தில், ஒரு கட்டத்தில் முதலாம் எதிரி இறந்தவரை காலால் உதைத்ததாக இறந்தவர் கீழே விழுந்தார் என்று கூறியுள்ளார்.

சோமசுந்தரம் தமிழில் கொடுத்த சாட்சியத்தில் முதலாம்எதிரி இறந்தவரை மூன்று தடவை சுடுகின்றபொழுது இறந்தவர் எழும்பிவிட்டார் என்று கூறியிருக்கின்றார்.

எனவே இறந்தவர் எழும்பி நிற்பதற்கு முன்பு முதலாம் எதிரி அவரை சுட்டிருக்க முடியும்.

அரசாங்க பகுப்பாளரின் அறிக்கையில் எக்க 1

## காணி விற்பனைக்கு

உரும்பராய்ச் சந்திக்கு அருகாமையில், ஞாபகார்த்த மண்டபத்திற்கு அண்மையில் யாழ். பலாலி வீதியில் 7 பரப்புக் காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு கொள்ளவும்:
ப. சோமசுந்தரம்
"பாமபதி", பலாலி ரோட்,
உரும்பராய் தெற்கு. உரும்பராய்.

[1449]

உ
சிவமயம்

## திறப்புவிழா அழைப்பு

அன்புடையீர்,

இன்று சனிக்கிழமை
காலை 6-20 மணி தொடக்கம் 7-30 மணி வரையுள்ள சுபவேளையில் நாம் புதிதாக அமைத்துள்ள

### "ஏவிஎம்ஸ் ஸ்ருடியோஸ்"

ஸ்தாபனத்தை ஆரம்பித்து நடாத்த பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டிக்கொள்ளுகின்றோம்.

117, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்,
தொலைபேசி; 7686

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்
வி. ஆர். எம். அன் கோ,
ஏ. வி. எம்.

மங்கள விளக்கேற்றுதல்:
திரு: சு. நடராசா
(யாழ். மாவட்ட அபிவிருத்திசபைத் தலைவர்)
திரு. இராஜா விசுவநாதன்
(யாழ். மாநகரசபை முதல்வர்)
ஸ்ருடியோவை திறந்து வைத்தல்:
சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
வியாபாரத்தை ஆரம்பித்து வைத்தல்:
திரு. தேவநேசன் நேசையா
(யாழ் அரசாங்க அதிபர்)
கமராவை இயக்கி வைத்தல்:
திரு. வெ. யோகேஸ்வரன்
(யாழ். பாராளுமன்ற உறுப்பினர்)
புகைப்பட ஆய்வுகூடத்தை திறந்துவைத்தல்:
திரு. எஸ். சிவஞானம்
(யாழ். மாநகரசபை ஆணையாளர்)

1456

மணிவாக்கு

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் நன்றே நினைமின் நமனில்லை நாணுமே.

— திருமந்திரம்.

# நமது நோக்கு

## தமிழர் தலைநிமிர் நகரம்

“பாரதப் பண்பாடும் மேனாட்டு நாகரிகமும் ஒன்றோடொன்று சேரமுடியாதளவில் மாறுபட்டவையல்ல; இவை இரண்டும் மனித வர்க்கத்துக்கு பெரு நன்மைகள் பயக்கக்கூடியன”

இவ்வாறு அகில உலகப் புகழ்வாய்ந்த வரலாற்றாசிரியர் ஆர்னல்ட் டொயின்பீ [Arnold Toynbee] அறுதியிட்டுக் கூறியிருக்கின்றார். இப்பெரியார் யாழ். நகருக்கு விஜயஞ்செய்து நகரமண்டபத்தில் நிகழ்த்திய உரையில் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார் அது சுமார் 25 வருடங்களுக்கு முன்.

1934ம் ஆண்டு யாழ் நகருக்கு வருகைதந்த உலக மகாகவி ரவீந்திரநாத் தாகூர் தமிழ் மக்களின் பண்பாடு குறித்துக் கருத்து தெரிவிக்கையில் நாம் எம் முன்னோரின் பெருமையிலும் பழமையின் மேன்மையிலும் அளவுகடந்த மோகம் கொண்டிருப்பதால் எதற்கும் தகுதியுடையவர்களாக முன்னேறமுடியாமல் தடுமாறுகின்றோம் என்றார். எமது தமிழ்நாட்டுச் சகோதரர்களும் இந்த மனப்போக்கையே கொண்டிருக்கின்றனர் என்று கூறி அதற்கு ஒரு உதாரணமும் கொடுத்தார். தென்னாட்டிலே ஒரு செல்வர் 35 இலட்சம் ரூபாவிலே ஒரு கோவிலைத் தன் பேரனார் கட்டி எழுப்பிய அதே மாதிரி இருப்பி அமைக்கும் முயற்சியில் காலம் கழித்தாராம்.

இவ்விரு பெரியார்களின் தெளிந்த கருத்துக்கள் எவ்வளவு தூரம் யாழ்ப்பாண மக்களின் வாழ்க்கை முறையை மாற்றியமைக்க முடிந்ததென்று நாம் மதிப்பிடுதல் நலம். நகர அமைப்பில் மேனாட்டுத் திட்டமிடல் தேவை.

எண்பது வயது நிரம்பிய ஆசிரியப் பெருந்தகை திரு கு. நேசையா எங்கள் நேற்றைய பத்திரிகையில் யாழ் மாநகரத்தின் வருங்காலத்துக்கு நல்கிய கருத்துரை யாழ் நகரபிதாக்கள் மட்டுமல்ல, தமிழ்மக்களின் தலைநகரமாகிய யாழ் நகரில் அக்கறைகொண்ட அனைவரும் கூர்ந்து கவனிக்க வேண்டிய ஒன்று.

கடந்த ஐம்பது ஆண்டுகளில் விஞ்ஞான வளர்ச்சி காரணமாக உலகில் கண்ட அற்புத மாற்றங்கள் எங்கள் நகரத்திலும் சிறிதளவாவது காணப்படுகிறது. உள்வீட்டுப் பிள்ளைகள் போல இங்கு காலம் கழிக்கின்றவர் இதனை உணர்வது கடினம்.

முற்றவெளியில் நின்று நாலாபக்கமும் எழும்பப்பட்டிருக்கும் கெம்பீர கட்டிடங்களும், வளாகங்களும் அங்கு நடைபெறும் பல வகைப்பட்ட அலுவல்களும் காட்சியளிக்கும் அழகு நகரத்தின் புதுப்பொலிவைக் குறிக்கின்றது.

இருப்பினும் இம்மாபெரும் நகரத்தின் வரலாற்றுக்கும் மக்களின் பண்பாட்டுக்கும் ஏற்ற வளர்ச்சிக்கு இன்னும் நாம் நெடுந்தூரபயணம் செல்ல வேண்டியிருப்பதை மூதறிஞர் திரு. நேசையா விபரித்து விளக்கியிருக்கிறார்.

நாம் முன் கூறியதுபோல் எண்பது வயதில் இத்தகைய இளமையைக் குறிக்கும் வெள்ளை உள்ளம் படைத்தவர்கள் உண்டானால் அவர் குறிப்பிடும் அரிய சிந்தனைகளைச் செயலாக்கும் பணியில் திட்டமிட்டுத் தக்க சேவையாற்றினால் அடுத்த ஐந்து வருடங்களில் இந்த நகரம் எழில் மிகு யாழ்ப்பாணம்' என்ற விலாசத்துக்கு உரித்தாகுமென நம்பலாம்.

## வழமைபோல்

எம்மிற் பலர் எதிர்பார்த்தது போல் நிதி அமைச்சர் திரு. ரொனி டி மெல் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் நிகழ்த்திய பட்ஜட் உரை எவ்வித உற்சாகத்தையும் ஊட்டும் வகையில் அமையவில்லை எனலாம்.

வாண விளையாட்டுகளுக்கு நிதி நிலை இடங்கொடுக்காத அளவில், “நோயாளிக்கு நடந்த சத்திரசிகிச்சை வெற்றி; ஆனால் அவர்…” என்ற பாங்கில் அமைச்சரின் பேருரை அதிசயமற்ற பச்சைத் தண்ணீர் போல பளபளத்தது.

இருப்பினும் அங்கு இடம் பெற்ற அருளுரையின் சில பகுதிகள் மக்களின் கவனத்துக்குரியவை.

நாட்டின் முதுகெலும்பு என்று சொல்லும் விவசாயிகளுக்கு வேண்டிய உற்சாகங்கள் வழங்கப்படவிருக்கின்றன என்பது அரசுக்கு ஞானோதயம் பிறந்திருக்கிறதாக் கருதலாம் வட பகுதி மிளகாய், வெங்காய மன்னர் இவ்வாக்குறுதியில் அதிக நம்பிக்கை வைப்பார்களோ என்பது சந்தேகமே.

பொதுவாக பணக்கார வர்க்கத்தை வரி விதிகளால் சற்றே வருத்தி ஏழைமக்களுக்கு வேண்டிய வசதிகள் வழங்கும் கொள்கை குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இந்நாட்டில் ஆட்சியே மிகச்சில பெரிய கோடீஸ்வரர்களின் கையில் சிக்கி இருக்கும்போது இவ்வித புரட்சிகரமான நடவடிக்கைக்கு வழி ஏது?

டாக்டர் என். எம். பெரேராவின் பட்ஜட் பேருரைகளில் இடம்பெறும் பல்லவியும் இங்கு காணப்படுகிறது. வெளிநாட்டு உதவியில் மட்டும் வேறுபாடு.

செல்வர்களுக்கும் ஏழை மக்களுக்கும் உள்ள இடைவெளியை நீக்குவதே பட்ஜட்டின் மூலக்கொள்கை. கடின உழைப்பாலேயே நாட்டின் பொருளாதார நிலைமையை உயர்த்தலாம். இன்றைய சந்ததியினர் வாயை வயிற்றை இறுக்கிக் கட்டினால் எதிர்காலம் ஒளிமயமாகும். என்ற சோதிடத்தில் என். எம்மின் நீண்ட அழகிய உரை முடிவது வழக்கம்.

அக்காலத்தில் அது கேலிக்கிடமானது. இன்று நிதி அமைச்சர் அதுபோன்ற அருளுரை வழங்குவதில் மக்கள் நம்பிக்கை கொள்வதெங்ஙனம்?

# அமரர் ஹரன்பற்றி ஒரு பசுமையான நினைவு

ஆசிரியர் கே. பி. ஹரன் அவர்களை முதன் முதல் சந்தித்த நிகழ்ச்சியை பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையவர்கள் இங்கு மிக உருக்கமாக விளக்குகிறார்கள்.

எத்தனையோ ஆண்டுகள் பறந்து மறைந்து போயின. எந்த ஆண்டு என்று சொல்ல முடியவில்லை ஈழகேசரிப் பத்திரிகை நடந்துகொண்டிருந்த காலம் ஆகலாம்

ஒருமுறை மாலை நேரம் கொழும்பில் வெள்ளவத்தைப் புகையிரதஸ்தானத்தில் புகையிரத வரவை எதிர்பார்த்துக் கொண்டு உரிய இடத்தில் காத்து நின்றேன். சனசஞ்சாரம் மிகக்குறைவு.

சற்றே தூரத்தில் அதே மேடையில் தூய வெண்ணிற உடையுடன் ஒருவர் காட்சியளித்தார். அவருடைய முக தேஜஸ் என்னைப் பெரிதும் கவர்ந்தது. அவர்முகத்தை உற்று நோக்கினேன் அதேசமயத்தில் அவரும் என்னை உற்று நோக்கினார். நோக்கியவர் மெல்ல மெல்ல நடந்து ஒரு கணத்தில் மிகமிக விரைந்து “நீங்களா” என்று சொல்லிக் கொண்டு என்னை அணுகினார். எனக்கும் பூர்வ சென்ம் தொடர்பு உண்டு போலும்.

0 0 0

இந்த அரிய சந்தர்ப்பம்
“அண்ணலும் நோக்கினான்
அவளும் நோக்கினாள்”
“இருவரும் மாறிப்புக்கு
இதயம் எய்தினர்”
பிரிந்தவர் கூடினால்
பேசவேண்டுமோ”
என்ற கம்பராமாயணத் தொடர்களை நினைவுபடுத்துகின்றது.

0 0 0

மகாவிஷ்ணுவும் மகாலக்குமியும் ஒன்றுபட்டிருந்தவர்கள் பின் பிரிந்து, இராமனும் சீதையுமாய் ஒன்றுபட்டார்கள். பிரிவின் பின் நிகழ்ந்த கூட்டரவின் அனுபவம் சொல்லவேண்டுமா! யாவரும் குறிப்பிடலாறு, சம்பவிக்கும் சந்தர்ப்பங்களில், அறியக்கூடியதே என்றவாறு.

0 0 0

கனம் ஹரன் அவர்களுக்கு, எனக்கும் பூர்வ சென்ம

கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

எனக்கு வெகு ஆச்சரியமாயிருந்தது என்ன செய்வதென்றறியாது நின்றேன். அப்பால் நிகழ்ச்சியைச் சொல்லுதற்கு நாணுகின்றேன். அவர் என்னை இறுகக் கட்டித் தழுவி அணைத்துக்கொண்டார் என்று மாத்திரம் தெரிவித்துக்கொள்கிறேன். அப்பால் நிகழ்ச்சிகளை மறதி தன்வயஞ் செய்து கொண்டது.

என்னைக் கட்டியணைத்தவரை இனிக் கட்டியணைத்தவர்கள் என்ற வாய்ப்பாட்டில் சொல்ல விரும்புகின்றேன். கட்டியணைத்தவர்கள் கனம் ஹரன் அவர்களே என்பதைச் சொல்லாமலே வாசகர்கள் ஊகித்துக் கொள்வார்கள் என்று நம்புகின்றேன்.

தொடர்பு உண்டு போலும்.

0 0 0

எனக்கு வயது 83. வயசால் மூப்பு எய்தியபோதும் குண விசேஷங்களால் திரு. ஹரன் அவர்களே மூத்தவர்கள். அவர்களின் ஆத்மீக ஆசியை என் மனம் வேண்டிநிற்கின்றது.

0 0 0

கனம் ஹரன் அவர்களை நினைக்குந் தோறும், ஈழநாட்டில் அவர்களைப் பற்றிப் படிக்குந்தோறும், முதன் முதல் அன்று வெள்ளவத்தையில் நிகழ்ந்த சந்திப்பே! பச்சைப் பசிய தளிர்விட்டு என்னை விழுங்குகின்றது. அவர்களின் ஆத்ம சாந்தியை முன்னிட்டுத் திருவருளைப் பிரார்த்திப்போமாக.

## மக்கள் கருத்து

### அபிவிருத்தி சபை கவனிக்குமா?

ஆவரங்காலிலிருந்து சந்தையடி வீதி மேற்கு நோக்கிச் சென்று ராசவீதியில் முடிவடைகிறது இவ்வீதியால் தினமும் பல தொழிலாளர்கள் அச்சுவேலி தொழிற் பேட்டைக்கு பதிவு செய்யப்பட்ட வாகனங்களில் கடமைக்குச் சென்று வருகின்றனர் இவ்வீதி மழைகாலங்களில் சந்தையடியில் கழிவுநீர் செல்லும் வாய்க்கால் மறிக்கப்பட்டதால் நீர் தேங்கி நிற்கிறது இவ்வீதியை திருத்துவதற்கு எடுத்த முயற்சிகள் பயன் அற்றுப் போய்விட்டன. போதாக்குறைக்கு இவ்வீதியின் நடுப்பகுதியில் இருக்கும் மக்கள் வீதிக்குக் குறுக்காக கற்களால் தடைகள் போட்டும், வீதியை குறுக்கே வெட்டியும் சேதப்படுத்தியதால் பலர் பல இன்னல்களுக்கு ஆளாகிவிட்டனர். சுமார் 25 வருடங்களுக்கு மேல் போடப்பட்ட இவ்வீதியில் இல உள்ளூர் பொறியியலாளர்கள் செய்த கைங்கரியத்தை சர்வோதய சன சமூக நிலையம் அபிவிருத்திச் சபையின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளது. அபிவிருத்திச் சபை இவ் வீதியின் அவல நிலையைக் கவனத்திற்கு எடுக்குமா?

மு. பரமசிங்காரம்
புத்தூர்

ஃ ஃ

### தண்ணீரிலா ஓடுகின்றன?

வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திட்டம் இலங்கையின் பிரதான திட்டங்களில் ஒன்றாகும். அதுவும் தமிழ்பகுதி நீர்ப்பாசனத் திட்டங்களின் முக்கிய திட்டமாக விளங்கும் இது தமிழ் மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு எழுபத்தைந்துவீதம் உதவி புரிந்து வருகின்றது. இத் திட்டத்தின் கீழ் இரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளை உள்ளடக்கி இங்கு வாழும் மக்களுக்கு தேவையான தண்ணீர் வசதிகளை அளித்து விவசாயிகளின் பொருளாதாரத்தை வளர்த்து வருகின்றது.

இத்திட்டத்தின் வளர்ச்சியையும் முக்கியத்துவத்தையும் அறிந்த இலங்கை அரசாங்கமும் உலக வங்கியும் இத்திட்டத்திற்கு மேலும் நிதிவசதிகளையும் இயந்திர சாதன வசதிகளையும் வழங்கி வருகின்றது. இதன்பயனாக இரண்டு புத்தம்புதிய “ஜீப்” வண்டிகள் இத்திட்டத்திற்கு வழங்கப்பட்டன ஆனால் இவ் வண்டிகள் பெரும்பாலும் அதிகாரிகளின் தனிப்பட்ட பாவனைக்கே பயன்படுவதாக பொதுமக்கள் பேசிக்கொள்கிறார்கள்

இந்த ஜீப் வண்டிகள் தண்ணீரில் ஓடுகின்றனவா என்றும் கூட சிலர் கேட்கிறார்கள்.

குடியேற்ற விவசாயி,
துணுக்காய்

# உலகசமாதானமும் வை. எம். சி. ஏ வாரமும்

வீட்டுக்கு வீடு சண்டையும், நாட்டுக்குநாடு போரும் நிறைந்த உலகில் சமாதானம் நலிந்து. பூமியில் தாழப்புதைகின்றது. ஒரு சாரார் முன்னொருபோதும் இல்லாதவாறு வட்ட மேசை மகாநாடுகள் பல கூட்டி சமாதானத்தைப் பற்றி அதிகமாகப் பேசுவது ஒருபுறம் இருக்க, வல்லரசு நாடுகள் தம்செல்வத்தை போர்க் கருவிகள் உற்பத்தி செய்வதிலேயே செலவு செய்கிறது. உலகில் கிடைக்கப்பெறும் போர் ஆயுதங்கள் உலகில் உள்ள மக்களை ஒருகணத்தில் கொல்லவல்லது மல்லாமல்; மேலும் பத்துமடங்கு மக்களை அழிக்கவும்வல்லது.

பஞ்சம், பசி, பட்டினி கோடிக்கணக்கான மக்களைத் தாக்குகின்றது. உணவு; அரசியல் லாபங்களுக்குக் காரணமாக இருப்பதோடு பொருளாதாரக்கட்டுப்பாட்டை ஏற்படுத்தக்கூடிய தொழிற்பிரச்னைக்கும் இளைஞர் அமைதியின்மைக்கும்கூட ஒரு காரணமாகும் இப்பிரச்னைக்குத் தீர்வு காண சரியான எத்தனம் எடுக்காது ஆயுத உதவியுடன் பலாத்காரம் பாவிப்பது மனித உரிமைகளை மீறுவதுமல்லாமல் பிரச்னைகளுக்குத் தீர்வுகாணவும் முடியாதிருக்கின்றது. இப்பேற்பட்ட குறைபாடுள்ள மக்கள் தொகை அதிகமாக உள்ளதால் இவர்கள் சமாதானமாக வாழ்கின்றார்கள் என்று கூறமுடியாது.

பூமியின் இயற்கை வளம் குறைந்து, எண்ணைவளம் குறைந்து வருகிறது. செல்வந்தர்கள் மேலும் செல்வத்தைப் பெருக்குகின்றனர். ஏழைகள் மிகவும் கீழ்நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். மக்கள் பீதியோடு வாழும் இக்காலத்தில் வை. எம். சி. ஏ. தனது வருடாந்த ஜெப வாரத்தையும் உலக ஐக்கியத்தையும் ‘சமாதானம்’ என்ற மகுட வாக்கியத்தை முன்வைத்து இம்மாதம் 8ம் திகதி முதல் இன்று 14ம் திகதிவரை அனுஷ்டிக்கின்றது. இக்காலத்தில் உலகந்தோறும் உள்ள வை. எம். சி. ஏக்கள் உலக சமாதானத்துக்காக வழிபட்டு சமாதான காரணர்களையும் சமாதானத்தையும் உருவாக்கும் செயற்திட்டங்களில் ஈடுபடும்.

இவ்வாரத்துக்காக வை. எம். சி. ஏ. உலக சம்மேளனம் தயாரித்த கைநூல், “படைபலமும் பராக்கிரமமும் அல்ல கடவுளே எங்கள் சமாதானம்” என்று வெளிப்படுத்துகிறது. தீர்க்கதரிசி ஏசாயா உரைத்தது போல்; பட்டயங்களை மண்வெட்டிகளாகவும் ஈட்டிகளை அரிவாள்களாகவும் மாற்றவும் ஜாதிக்கு விரோதமாக பட்டயம் எடுக்காமலும் இனிமேல் யுத்தத்தைகற்காமலும் இருக்க சமாதானமான காலம் வர வை. எம். சி. ஏ. பிரார்த்திக்கின்றது.

சி. விஜயகுலசிங்கம்

# போலந்தில் 22 நாள் வேலைநிறுத்தம்

## கைவிடப்பட்டது

### 1,50,000ஊழியரும்வேலைக்குத்திரும்பினர்

வார்சோ, நவ. 13
போலந்தில் பெரும் அரசியல் நெருக்கடியை ஏற்படுத்திய 22 நாள் வேலைநிறுத்தம் இன்றுடன் கைவிடப்பட்டது.
வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு வந்த ஒரு லட்சத்து 50 ஆயிரம் ஊழியர்களும் வேலைக்குத் திரும்பினர்.
வேலைநிறுத்தக்காரர்களின் கோரிக்கைகள் குறித்து சொலிடாரிற்றி தொழிற் சங்கத் தலைவர்களுக்கும் அரசாங்கத்துக்குமிடையே பேச்சு நடத்துவது தொடர்பாக ஒப்பந்தம் ஒன்று செய்துகொள்ளப்பட்டதை அடுத்தே வேலைநிறுத்தம் கைவிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.
தொழிற்சங்கத் தலைவர்களுக்கும் அரசுக்குமிடையே அடுத்த செவ்வாய்க்கிழமை பேச்சுவார்த்தை நடைபெறுமென்றும் அறிவிக்கப்பட்டது. (இ)

## இந்திராகாந்திக்கு மேலும் ஒரு டாக்டர் பட்டம்

### பிரான்ஸ் பல்கலைக்கழகம் கௌரவம்

பாரிஸ், நவ. 13
இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்திக்கு உலகப் புகழ்பெற்ற பிரான்ஸ் பல்கலைக்கழகம் ஒன்று டாக்டர் பட்டம் வழங்கிக் கௌரவித்துள்ளது.
பல உலக நாடுகளைச் சேர்ந்த பல்கலைக்கழகங்கள் திருமதி காந்திக்கு ஏற்கனவே டாக்டர் பட்டம் வழங்கிக் கௌரவித்தமை தெரிந்ததே.
ஒக்ஸ்போர்ட், மாஸ்கோ, கொலம்பியா, ஜப்பான், பிராக்ஸ் ஆகியவை உட்பட 19 பல்கலைக்கழகங்கள் இதுவரை திருமதி காந்திக்கு டாக்டர் பட்டம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.
திருமதி காந்தி தற்போது பிரான்ஸில் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார். (இ)

## அமெரிக்க-எகிப்திய ராணுவ ஒத்திகை

லெபனன், நவ. 13
அமெரிக்க-எகிப்திய சிறப்பு ராணுவ வீரர்களின் ஒத்திகை ஒன்று மத்திய கிழக்கில் நடைபெறவுள்ளது. இப்பயிற்சியில் எகிப்திய பிரதேசத்துடன் சூடான், ஓமான், சோமாலியா நாடுகளின் பிரதேசங்களையும் உள்ளடக்கியிருக்கும். அத்துடன் அமெரிக்கத் தளத்தில் உள்ள கேந்திர முக்கியத்துவம் மிக்க படையினரும், மத்தியதரைக் கடலில் உள்ள 6வது கடற்படையும். இந்துசமுத்திரத்தில் உள்ள இதர அணிகளும் இப்பயிற்சிகளில் பங்கெடுக்கும்.
நவம்பர் முற்பகுதியில் தொடங்கவிருக்கும் இப்பயிற்சிகள் ஒரு மாத காலத்திற்கு நடைபெறுமென்று தெரிகின்றது. இப்பயிற்சிகள் லிபிய எல்லையில் மட்டுமல்ல, ஆபிரிக்காவின் மூலையிலும் பதட்ட நிலையை ஏற்படுத்தலாமென்று அவதானிகள் கருதுகின்றனர்.
அமெரிக்காவின் நடவடிக்கைகள், மத்திய கிழக்குக்கு உடனடியான தீர்வு ஒன்று காணப்படவேண்டிய அவசியத்தையே வலியுறுத்துகின்றன என்று அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

## கொலம்பியாவில் கோளாறு

### 3 தினங்களுக்குமுன் தரை இறங்கும்

வாஷிங்டன், நவ. 15
விண்வெளியில் வலம்வந்து கொண்டிருக்கும் அமெரிக்க விண்வெளிக் கலமான "கொலம்பியா" திட்டமிட்டதற்கு மூன்று தினங்களுக்கு முன்னதாகவே பூமிக்குத் திருப்பி அழைக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.
"கொலம்பியா"வின் இயந்திரத்தில் கோளாறு ஏற்பட்டதையடுத்தே இந்த ஏற்பாடுசெய்யப்பட்டதாக விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.
எதிர்வரும் செவ்வாய்க்கிழமைக்குப் பதிலாக நாளை சனிக்கிழமை தரையிறக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. [இ]

## "மெக்ஸிக்கோ மாநாடு பலனளிக்கவில்லை"

ஜகார்த்தா, நவ. 13
"மெக்ஸிக்கோவில் நடைபெற்ற வடக்கு-தெற்கு பொருளாதார மாநாடு பொருளாதாரத் துறையில் இன்று நிலவும் ஏற்றத்தாழ்வுகளை அழித்தொழிக்கும் என்ற நம்பிக்கையுடன் பல ஏழை நாடுகள் மாநாட்டில் பங்குபற்றின. ஆனால் எதிர்பார்த்த நன்மைகள் கிடைக்கவில்லை. வர்த்தகத்தில் உள்ள பாகுபாடுகள் அப்படியே உள்ளன. சர்வதேச நிதி ஸ்தாபனங்களும் வங்கிகளும் இலேசான நிபந்தனைகளில் கடன் வழங்கும் என்ற எதிர்பார்ப்பும் நிறைவேறவில்லை. அபிவிருத்தியடையும் நாடுகள் ஏற்றுமதி செய்யும் பண்டங்களின் விலையை நிர்ணயிப்பதில் அவற்றுக்கு பாத்திரம் இடைக்கும் என்ற நம்பிக்கையும் நிறைவேறவில்லை"
இவ்வாறு "இந்தோனேசியன் ஒப்ஸர்வர்" பத்திரிகை எழுதியுள்ளது.
பத்திரிகையாளர் மத்தியில் பேசிய இந்தோனேஷிய உப ஜனாதிபதி டாக்டர் ஆதம் மாலிக் "எங்கள் கூட்டத்தால் பயனேதும் கிடைக்கும் என்று ஆரம்பத்திலிருந்தே நாங்கள் எதையும் எதிர் பார்க்கவில்லை என்று கூறியுள்ளார்.
மகாநாடு குறைந்த பட்சம் கோரிக்கைகளையாவது வழங்கி புதிய சர்வதேச பொருளாதார ஒழுங்கை ஏற்படுத்துவதற்கு உதவவில்லை என்று அவர் அபிப்பிராயம் தெரிவித்துள்ளார்.

## பாஸ்கரா-2 நவம்பர் 20ல் பயணம்

புதுடில்லி, நவ. 13
இந்தியாவின் இரண்டாவது "பாஸ்கரா-2" இம்மாதம் 20ந் திகதி சோவியத் யூனியனிலிருந்து விண்வெளிக்கு அனுப்பி வைக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.
கடந்த 20 நாட்களாக இந்திய-சோவியத் விஞ்ஞானிகள் இந்த விண்கலத்தைத் தீவிரமாகப் பரிசோதனை செய்து, பூர்வாங்க ஏற்பாடுகள் யாவற்றையும் செய்து முடித்துள்ளனர். [இ]

## வெள்ளை அறிக்கையில் சமயக்கல்விக்கு முக்கிய இடம் வேண்டும்

[உடுப்பிட்டி]
அகிலத்திலும் சமயபாடபோதனைக்கு முதல் இடம் கொடுத்த நாடு நம் இலங்கை நாடே என்றும் மார்தட்டிய ஈழத்திருநாட்டில் மறை போதனை மட்டுப்படுத்தப்பட்டு விடுமோ என்ற அச்சமிகை அண்மையில் வெளிவந்துள்ள கல்வி வெள்ளை அறிக்கைக்குக் கண்டனக் குரல் எழுப்பி மறைக் கல்விக்கு முக்கிய இடம் கொடுக்க முழு மூச்சாய் ஈடுபட்டுவருகிறது யாழ். மறை மாவட்டக் கத்தோலிக்க ஆசிரியர் சங்கம்."
இவ்வாறு யாழ் மறை மாவட்டக் கத்தோலிக்க ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. ஜி. வின்சென்ற் கத்தோலிக்க ஆசிரியர் சங்கத்தின் இரண்டாவது ஆண்டு நிறைவு விழாவைக்கொட்டி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். [கு]

## அமரர் முத்துக்குமாரு



யாழ். இந்துக் கல்லூரித் தமிழ் வித்தியாசாலையின் அதிபராக 1941-ஆம் வருடம் முதல் 1966-ஆம் வருடம் வரை சிறப்பாகப் பணிபுரிந்தவர் மறைந்த மட்டுவில் கந்தையா முத்துக்குமாரு.
கல்லூரியில் சேவையாற்றிய காலத்தில் இந்துக்கல்லூரி அதிகாரசபை, சக ஆசிரியர்கள், மாணவர்கள் பெற்றோர் மற்றும் ஊரவர் பாராட்டைப் பெற்றிருந்தவர். அவர்கள் யாவராலும் ஒருமுகமாக மதிக்கப்பட்டவர் என்பதை இந்துக் கல்லூரியின் ஒரு பழைய மாணவன் என்ற கோதாவில் எம்மால் அடித்துக் கூறமுடியும். அமரர் மட்டுவில் கந்தையா முத்துக்குமாரு மாஸ்ரர் காலத்தில் யாழ். இந்துக் கல்லூரியின் தமிழ் வித்தியாசாலை யாழ்ப்பாணத்திலுள்ள வித்தியாசாலைக்குள் முன்மாதிரியான ஒரு வித்தியாசாலையாகத் திகழ்ந்திருந்ததென்பதற்கு கல்வித்துறையைச் சார்ந்தவர்கள் சாட்சியம் கூறுவர். யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற சைவ மகாநாடு மற்றும் கல்லூரிக் கட்டட நிதிக்காக யாழ். இந்துக்கல்லூரி நடத்திய களியாட்டுவிழா என்பவற்றின் வெற்றிக்காகப் பம்பரம்போல் உழைத்தவர் இப்பெரியார். ஆசிரியர்களுக்கு எல்லாம் ஓர் உதாரண புருஷராக சீலமும், ஒழுக்கமும் பேணி சைவாசார சீலராக வாழ்ந்து காட்டிய இப்பெரியாரது மரணத்தால் வருந்தும் அன்னாரது மக்கள்-மருமக்களுக்கும், உற்றார், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இ. விசுவநாதன்

## சுதந்திர வளர்ச்சிப் பாதையில் இந்தியா

மாஸ்கோ, நவ. 13
"தொழில்துறை உற்பத்தியை எடுத்துக்கொண்டால், உலகில் தொழில்துறையில் முன்னணியில் நிற்கும் பத்து நாடுகளில் ஒன்றாக இந்தியா விளங்குகிறது. சுதந்திரம் பெற்ற பின்னர், அதன் மொத்தத் தேசிய உற்பத்தி 150 சத விகிதம் உயர்ந்துள்ளது.
இந்த வரைகள் "இன்றைய ஆசியா, ஆபிரிக்கா" என்னும் சஞ்சிகையில் வெளியிடப்பட்டுள்ளன.
இந்தியாவின் அயல்துறைக் கொள்கை பற்றி அந்தச் சஞ்சிகை குறிப்பிடுகையில், நாட்டின் தன்மையானது வலுமிக்க, பயனுள்ள கொள்கையைப் பின்பற்றி வருகிறது என்பதை நினைவுகூர்ந்துள்ளது. "ஏம்பூச்சிய மக்கள் குடியரசை அங்கீகரித்தது, பங்களாதேஷ விடுதலை ஸ்தாபனத்திற்கு முழுமையான ராஜிய அங்கீகாரம் வழங்கியது. இவை இந்தியாவின் மிக முக்கிய சர்வதேச நடவடிக்கைகளாகும்" என்று அந்தச் சஞ்சிகை எழுதுகின்றது.

## ஒரு வாரம் இந்திரா, நேரு பிறந்த தின விழா

சென்னை, நவ. 13
இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் பிறந்த தினமும், அமரர் ஜவஹர்லால் நேரு பிறந்த தினமும் மதுரையில் ஒருவாரகாலம் கொண்டாடப்பட இருக்கிறது.
மதுரையில் இந்திரா காங்கிரஸ் கட்சியினரால் கொண்டாடப்படும் இவ்விழா நாளை சனிக்கிழமை ஆரம்பமாகிறது. (இ)

## விரிவுரையாளராக பதவி ஏற்றார்

(யாழ்ப்பாணம்)
கவிஞர் காரை சுந்தரம்பிள்ளை அவர்கள் பலாலி அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளராக இம்மாதம் முதலாம் திகதி முதல் பதவி ஏற்றுள்ளார்.

## நிர்வாக அதிகாரி

சோண்டாவில்]
யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபையின் நல்லூர் கிராமசபை உப பணிமனைக்கு நிர்வாக அதிகாரியாக திரு. சி. பாலசிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இங்கு முன்னர் விசேட ஆணையாளராகவும் கடமையாற்றியுள்ளார்.
இவர் மாவட்ட மந்திரியின் இணைப்பு அதிகாரியுமாவார். (க)

## போர் விலக்கல் ஒப்பந்தம்

# இந்தியாவுக்கு பாக். எதுவித யோசனையும் கூறவில்லை

### வானொலிச் செய்திக்கு மறுப்பு

புதுடில்லி, நவ. 13
இந்திய-பாகிஸ்தான் போர் விலக்கல் ஒப்பந்தம் குறித்து பாகிஸ்தானிடமிருந்து இந்தியாவுக்கு எதுவித அழைப்பும் வரவில்லை என்று இந்திய வெளிவிவகார அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.
போர் விலக்கல் ஒப்பந்தம் பற்றி பாகிஸ்தான் தெரிவித்த யோசனைக்கு இந்தியா இன்னமும் பதிலளிக்கவில்லை என்று பாகிஸ்தான் வானொலி வெளியிட்ட செய்தி பற்றி கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
போர் விலக்கல் ஒப்பந்தம் குறித்து இந்தியாவிலுள்ள பாகிஸ்தான் தூதரகம் மூலமோ இஸ்லாமாபாத்திலுள்ள இந்தியத் தூதரகம் மூலமோ பாகிஸ்தான் எந்த முறைப்படி அறிவிக்கவில்லை என்றும் அந்த அதிகாரி கூறினார். (இ)

# பாற்பண்ணை அமைக்க வங்கிக்கடன்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் பால் உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு சிறுபாற்பண்ணைகளை அமைக்க வங்கிக்கடன் வழங்கப்பட இருக்கிறது.

பாற்பண்ணைகளுக்கு இரண்டு பசுக்களை வாங்க 5 ஆயிரம் ரூபாவை இலங்கை வங்கி கடனாக வழங்கவுள்ளது.

இவ்வாறு பண்ணைகளை அமைக்கவிரும்புபவர்கள் தமது பகுதியிலே உள்ள கால்நடை வைத்தியர்களிடம் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (இ)

## நூல் அறிமுகம்

(சுழிபுரம்)

குழந்தைக்குரல் - பாலர் கவிதை நூல் அறிமுகம் வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் மண்டபத்தில் வரும் 25ம் திகதி புதன்கிழமை பகல் நடைபெறவுள்ளது. இவ்விழாவில் பாரதியார் நூற்றாண்டு நினைவு விழாவும் நடைபெறும். குழந்தைக்குரல் ஆசிரியர் திரு. ச. கந்தசாமியை கௌரவித்து பரிசு பாராட்டு வழங்குவர். (இ)

## சமாதான நீதவான்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகரசபை உறுப்பினர் திரு. சு. சண்முகராஜா சமாதானநீதவானாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

சுதுமலையைச் சேர்ந்த இவர் யாழ் இந்துக்கல்லூரி பழைய மாணவரும், இந்துக் கல்லூரி, யாழ் இந்து மகளிர் கல்லூரி, இந்து ஆரம்பபாடசாலை ஆகியவற்றின் அபிவிருத்திச்சபையின் உறுப்பினரும் ஆவார். (இ)

## பெரும்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் கூறியதாவது; எதிர்காலத்தில் இலங்கையின் அரசியல் பொருளாதார நெருக்கடி மிகவும் தீவிரம் அடையும். 82ம் ஆண்டில் பணவீக்கம் 50 சதவிகிதத்தை தாண்டிவிடும். யார் ஆட்சிக்கு வந்தாலும் இந்தப் பிரச்சினையை சரியான பொருளாதாரத்திட்டமில்லாமல் சமாளித்துவிட முடியாது. உலகப் பணவீக்க நெருக்கடியில் இன்று பல உலக நாடுகளே சிக்கித்தவிக்கின்றன. இஸ்ரேல் நாட்டிற்கு அடுத்தபடியாக எமது நாட்டில்தான் பணவீக்கம் இருந்துவருகிறது.

ஐ. தே. க. ஆண்டால் என்ன சிறிலங்கா ஆண்டால் என்ன தாராள இறக்குமதிக் கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கும். இதனால் உள்ளூர் உற்பத்திகள் குறைந்துகொண்டே போகும். வேலையில்லாத் திண்டாட்டம் மேலும் அதிகரிக்கும். எமது தொழில் நுட்பத்திறன் பெற்ற தொழிலாளர்கள், தொழிலாளர் பிறநாடுகளுக்குச் சென்று பிழைக்கவேண்டிய நிலை மேலும் மேலும் ஏற்படும்.

இந்நிலையில் எந்த ஒரு முதலாளித்துவக் கட்சிகளாலும் பிரச்னைகளை தீர்க்கமுடியாது. உலக சோசலிச முகாமுடன் நிரந்தரமாக நிற்கக்கூடிய சக்தியினையும் இயக்கங்களையும் அணிசேர்த்து தொழிலாள வர்க்கத் தலைமையின் கீழ் ஒன்று சேர்வதன்மூலம்தான் முற்று முழுதாக நமது சகல பிரச்னைகளையும் தீர்க்கமுடியும் என்பதைச் சகலரும் உணரவேண்டியது அவசியமாகும். (இ)

ஹோம் பிறுன்ஸ் லிமிட்டெட்
உல்லாச பஸ் சேவை
யாழ்ப்பாணம் - கொழும்பு - யாழ்ப்பாணம்
கண்ணியமான, பாதுகாப்பான பஸ்சேவை
யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படுதல்:
செவ்வாய், வியாழன், ஞாயிற்றுக்கிழமைகளில்
கொழும்பிலிருந்து புறப்படுதல்:
திங்கள், புதன், வெள்ளிக்கிழமைகளில்
யாழ்ப்பாணத்தில் டிக்கட் பெறுமிடங்கள்:
(1) ஹோம் பிறுன்ஸ் லிமிட்.
இல: 82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: இல: 8310
(2) யாழ். மெட்டல்சேல்ஸ்சென்ரர்
இல: 6, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 7596.
(3) குயிக் ட்ரவல்ஸ் அன்ட் டூர்ஸ்
சரஸ்வதி கார்னரின்
சேர்ச்லேன், சாவகச்சேரி
கொழும்பில் டிக்கட் பெறும் இடங்கள்
ஹோம் பிறுன்ஸ் லிமிட்டெட்
463, காலி வீதி, கொள்ளுப்பிட்டி.
தொலைபேசி இல: 89190.
ரவிந்திரா ஸ்டோர்ஸ்
285, காலி வீதி, வெள்ளவத்தை
J. M. S. மிராண்டாஸ்
109, ஒல்கொட் மாவத்தை, புறக்கோட்டை.
நியூ புஷ்பா ஸ்டோர்ஸ்
127, காலி வீதி, பம்பலப்பிட்டி
தொலைபேசி இல: 88866
கட்டணம் ரூபா 65-00

## தபால்

(1ம் பக்கத் தொடர்ச்சி) ள்ளது.

இத்துணிகரக்கொள்ளை நேற்றுக்காலை அரியாலைச் சந்திக்கு அண்மையில் இடம்பெற்றது.

நேற்று அதிகாலை 5 மணி மணியளவில் யாழ் பஸ்நிலையத்திலிருந்து பளைக்குப் புறப்பட்ட இ. போ. ச. பஸ்ஸில் பிரயாணிகளுடன் தபால் பைகளும் எடுத்துச்செல்லப் பட்டதாம்.

பிரயாணிகளுடன் பிரயாணிகளாகப் பிரயாணம்செய்த இரு இளைஞர்கள், பஸ் அரியாலைச்சந்தியை அடைந்ததும் துப்பாக்கி, கிறிஸ்கத்தி போன்ற பயங்கர ஆயுதங்களைக் காட்டி பஸ் சாரதியையும், கண்டக்டரையும் பயமுறுத்தி பஸ்ஸை நிறுத்தினராம். பஸ் நின்றதும் பிரயாணிகளைப் பார்த்துப் பயப்படவேண்டாம் என்றும் தங்களுக்கு இடையூறுசெய்யாதவரை பிரயாணிகளுக்குத் துன்பம் விளைவிக்கப்போவதில்லை எனவும் கூறினராம்.

பிரயாணிகள் செய்வதறியாது திகைத்துக்கொண்டிருந்த வேளையில் இளைஞர்கள் இருவரும் தபால்பைகளை கிறிஸ்கத்தியால் வெட்டிப் பார்த்தனராம். அதன்பின் பளைத் தபாலநிலையத்திற்கு எடுத்துச் செல்லப்பட்ட தபால் பையை மட்டும் எடுத்துக்கொண்டு பஸ்ஸைவிட்டு இறங்கிச்சென்றனராம்.

இறங்கிச்செல்லும்போது இளைஞர்கள் பஸ் சாரதியைப் பார்த்து பஸ் சாவகச்சேரியைக் கடந்தபின் வேண்டுமானால் பொலிஸில் புகார் செய்யும்படியும், அதற்குமுன் ஏதாவது நடவடிக்கை எடுக்க முற்பட்டால் ஆபத்தில் மாட்டிக்கொள்வீர்கள் எனவும் எச்சரித்துச் சென்றனராம்.

இக்கொள்ளை சம்பந்தமாக யாழ் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் திரு. சிறீதரன், உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. இலங்கசிறீ ஆகியோர் தலைமையிலான பொலிஸ் கோஷ்டி ஒன்று விசாரணை நடத்திவருகிறது.

கொள்ளையர்களில் ஒருவர் கட்டைக் காற்சட்டையும் மற்றவர் நீளக்காற்சட்டையும் அணிந்திருந்தனர் எனவும் தெரியவந்துள்ளது.

கொள்ளையடிக்கப்பட்ட பஸ் யாழ் பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது.

பஸ்சாரதி நாகேந்திரம், கண்டக்டர் நவரத்தினம் ஆகியோர் கேதீயடி கொள்ளை சம்பந்தமாக யாழ் பொலிஸில் புகார்செய்துள்ளனர்.

(மண்டைதீவு நிருபர்)

## பளை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆயிரம் கொள்ளையடிக்கப்படாமல் தப்பிவிட்டது.

இத்துணிகரக்கொள்ளை வியாழக்கிழமை அதிகாலை 2-30 மணிக்குப்பச்சிலைப்பள்ளி ப நோ. கூ. சங்கத்தின் பளை கண்டி வீதியில் உள்ள பெற்றோல் நிலையத்தில் நடைபெற்றது.

இக்கொள்ளையர்களில் ஒருவர் சேட்டும் சாரமும், மற்றவர் சாரம் மட்டுமே அணிந்திருந்ததாகக் கூறப்படுகிறது.

சேட்டும் சாரமும் அணிந்திருந்த இளைஞர் துப்பாக்கியுடனும், சாரம் மட்டும் அணிந்திருந்த இளைஞர் ரிவோல்வருடனும் பெற்றோல் நிலையத்திற்குள் நுழைந்து, அங்கு பணிபுரிந்துகொண்டிருந்த சு. வைத்தீஸ்வரன் என்பவரை துப்பாக்கி முனையில் பயமுறுத்தி, அவரிடமிருந்த லாச்சித் திறப்பை வாங்கி, அதற்குள் இருந்த, இரும்புப் பெட்டித் திறப்பை எடுத்து, அதனைத் திறந்துவிடும்படி கேட்க ஊழியர் தனக்கு இரும்புப்பெட்டியைத்திறக்கத்தெரியாது எனக் கூறிவிட்டுபக்கத்திலுள்ள அறை ஒன்றுக்குள் ஓடிவிட்டாராம்.

அங்கிருந்து அவர் ஆட்களைக் கூட்டிக்கொண்டு வரும்போது, கொள்ளையர்கள், இரண்டு தடவை துப்பாக்கி வெட்டுக்களை, வானத்தை நோக்கித் தீர்த்துக்கொண்டு நடந்தே சென்றுள்ளனராம்.

இரும்புப்பெட்டி அங்குபணிபுரியும் ஊழியர்களைத் தவிர வேறு எவரும் திறக்கமுடியாத நிலையில், திறப்பையும், லாச்சிக்குள் இருந்த ரூ. 7359 பணத்தையும் மட்டும் எடுத்துக் கொண்டு சென்றுள்ளார்கள்.

பெற்றோல் நிலைய கொள்ளை பற்றி தகவலறிந்ததும், சாவகச்சேரி பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி திரு. தென்னக்கோன் தலைமையிலான பொலிஸ் கோஷ்டி ஸ்தலத்திற்கு விரைந்து சென்று, விசாரணை நடத்தியது.

## இப்படியும் நடக்கிறது

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் (தமிழ்) செய்தி அறிக்கையில் 'பட்ஜட்' பற்றிக் குறிப்பிடுகையில் சாராயத்தின் விலை ஐந்து ரூபாவால் அதிகரிக்கப்பட்ட போதிலும் பியரின் விலை மூன்று ரூபாவால் குறைக்கப் பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

அதாவது; 'பாணி'ன் விலை அதிகரிக்கப்பட்ட போதிலும் 'கேக்'கின் விலை குறைக்கப்பட்ட கதை மாதிரித்தான்!

காதோடு காதாக: ஒருபோத்தல் பியர், தவறணையில் இப்போ என்ன விலைக்கு விக்கிறுதாம் என்று பலர் நேற்று கதைத்துக்கொண்டார்கள்!

—ஊடுருவி

## சார்ஜன்ட் அன்ரன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொடங்கி எக்ஸ் 5 வரை அடையாளமிடப்பட்ட பாவிக்கப்பட்ட தோட்டாக்களும் பி 16 என்று அடையாளமிடப்பட்ட பாவிக்கப்பட்ட தோட்டாவும் கைத்துப்பாக்கி பி 3 ஆல் சுடப்பட்டது என்று கூறியுள்ளார்.

மேலும் பாவிக்கப்பட்ட தோட்டா எக்ஸ் 6, கைத்துப்பாக்கி பி 11 ஆல் சுடப்பட்டது என்று கூறியுள்ளார்.

ஆகவே இந்த வழக்கில் ஏழு தோட்டாக்கள் அரசாங்க பகுப்பாளரால் பரிசோதனை செய்யப்பட்டது.

சம்பவம் நடந்த இடத்தில் கண்டு எடுக்கப்பட்ட எட்டாவது தோட்டா பரிசோதனை செய்யப்படவில்லை.

சாட்சி சோமசுந்தரம் கூறியபடி முதலாம் எதிரி மொத்தமாக 3 தடவையும் இரண்டாக மொத்தமாக6தடவையும்எதிரி சுட்டிருந்தால் எவ்வாறு இராணுவ முகாமில் எட்டுத் தோட்டாக்கள் மட்டும் குறைந்திருக்கலாம். அத்துடன் சம்பவம் நடந்த இடத்தில் எவ்வாறு ஏழு வெற்றுத் தோட்டாக்கள் மட்டும் பெற்றிருக்கலாம் என்று எதிரிகளின் சட்டத்தரணி வாதாடினார்

மன்றின் அபிப்பிராயப்படி இராணுவமுகாமில் எட்டுத் தோட்டாக்கள் குறைந்திருந்தால் எட்டுத்தடவைக்குமேல எதிரிகள் சுட்டிருக்கமாட்டார்கள் என்பது கட்டாயமான அனுமானமல்ல.

அத்துடன் அன்றிரவு சம்பவம் நடந்தநேரம் இருந்தசூழ்நிலையில் சோமசுந்தரம் எல்லாவற்றையும் அன்று முழுமையாகக் கவனமாக அவதானித்திருக்கமுடியாமல் இருந்திருக்கலாம்.

மேலும் எதிரிகளின் சட்டத்தரணி, கைத்துப்பாக்கி பி 3 யாருடையகையில் இருந்தது, கைத்துப்பாக்கி பி 11 யாருடைய கையில் இருந்தது என்பது நிரூபிக்கப்படவில்லைஎன்று வாதாடினார்

சம்பவம் நடந்த அன்று முதலாம் எதிரியின் மேற்பார்வையில் தான் இராணுவ முகாமில் துப்பாக்கிகள் இருந்திருக்கின்றன, கைத்துப்பாக்கி பி 3பி 11 சம்பவம் நடந்த இடத்தில் பாவிக்கப்பட்டதற்கு ஆதாரங்கள் உண்டு. முதலாம் எதிரி சாட்சி காப்டன் மெண்டிசுக்கு தங்களைச் சனக்கூட்டம் ஓரிடத்தில சூழ்ந்த பொழுதுதாங்கள் மேலுக்குச் சுட்டதாகக் கூறியதாகக் கூறினார்.

இந்த வழக்கில் ஹோட்டலபியில் நடந்த சம்பவத்தையும் அதன்பின்பு தெருவில் நடந்த சம்பவத்தையும் ஒப்பிட்டுப்பார்க்கின்றபொழுது தட்டலாம், இரண்டாம் எதிரிகள் அன்று குற்றச் செயல்களை பொது எண்ணத்துடன் செய்திருக்கலாம் ஆகவே கைத்துப்பாக்கி பி 3, கைத்துப்பாக்கி பி 11 யாருடைய கையில் இருந்தது என்பது நிரூபிக்கவேண்டிய தேவை எழவில்லை. அத்துடன் பொது எண்ணம் இறந்தவரை முன் தெரியாவிட்டாலும் சடுதியாக ஏற்படலாம். இதைவிட வேறு சான்றுகள் உண்டு என்பது மன்றின் அபிப்பிராயமாகும்.

## மூன்றும் ஆண்டு நினைவாஞ்சலி



**திருமதி அன்னம்மா தாமோதரம்பிள்ளை**

மறைவு: 14-11-78

தாங்கள் திடீர் என எங்களையெல்லாம் கண்ணீரில் ஆழ்த்திவிட்டு இறைவனின் திருவடி சேர்ந்து வருடம் மூன்றாகியும் தங்களின் இனிய நினைவுகள் எங்களின் உள்ளத்தில் என்றென்றும் நிலைத்து நிற்க இறைவன் அருள் புரிய வேண்டுகிறோம்.

தங்களின் பிரிவால் மீளாத்துயருறும் கணவர், பிள்ளைகள், மருமகன், மருமகள், பேரப்பிள்ளைகள்

நா. தாமோதரம்பிள்ளை,
224, ஈப்போ வீதி,
கோலாலம்பூர்

(1443)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சின்னக்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி, 303-ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1981 ஆம் ஆண்டு நவம்பர் 14-ந் திகதி அச்சிட்டுப் வெளியிடப்பட்டது. Registered as News Paper. The General P. O. Sri Lanka Regd.Q. B. 100236/81. P. O. Box 49. Jaffna. தொலைபேசி 7707, 889, 8186.